திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் மொத்தம் பயிரிடக்கூடிய நிலங்களை வைத்திருப்பவர்களில் ஐந்து எக்கருக்கு மேல் வைத்திருக்கும் பட்டாதாரர்கள் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனிக்கேள்வி போட வேண்டும்.

காஞ்சிபுரத்தைத் தனி மாவட்டமாக்கல்.

*452 வினா—**திரு. எஸ். ஜே. ராமசாமி :**
திரு.கே. விநாயகம் :
திரு. கரு. சீமைச்சாமி : } மாண்புமிகு நிதி அமைச்சர்

தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் சில வட்டங்களையும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சில வட்டங்களையும் ஒன்று சேர்த்து காஞ்சிபுரம் மாவட்டம் ஆக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : நமது மாநிலத்தில் இப்போது இருக்கிற மாவட்டங்கள் ஒன்று பெரிதாகவும் ஒன்று சிறியதாகவும் இருக்கிறது என்ற காரணத்தினாலும், செங்கல்பட்டு மாவட்டம் மிகச் சிறியதாக இருக்கிற காரணத்தினாலும், செய்யாறு, அரக்கோணம், தாலுக்காக்களை எடுத்து செங்கல்பட்டு மாவட்டத்தோடு இணைத்தால், அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்ற விஷயத்தை அரசு யோசித்ததா ? இதைப்பற்றி பொது மக்களிடமிருந்தோ, அல்லது டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கமிட்டியிடமிருந்தோ சிபார்சு வந்ததா ? அதைப் பரிசீலித்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதுமாதிரியான யோசனை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற யோசனை மறைந்த முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு காஞ்சிபுரம் நகரசபை வரவேற்பு அளித்தபோது சொல்லப்பட்டது. இப்பொழுதிருக்கிற காஞ்சிபுரம், திருத்தணி, உத்திரமேரூர் தாலுக்காவோடு அரக்கோணம் தாலுக்காவும் வந்தவாசி தாலுக்காவும், செய்யாறு தாலுக்காவும், சேர்த்து ஒரு மாவட்டமாக அமைக்க வேண்டுமென்ற யோசனை கூறப்பட்டது. அந்த யோசனைக்கு பல இடங்களிலிருந்து எதிர்ப்பு வந்தது. செங்கல்பட்டு வக்கீல்கள் சங்கத்திலிருந்தும், திருவள்ளூர் வக்கீல்கள் சங்கத்திலிருந்தும், வட ஆர்க்காடு வக்கீல்கள் சங்கத்திலிருந்தும், எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. செங்கல்பட்டு நகரமன்றமும், மதுராந்தகம் பஞ்சாயத்து யூனியன் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் ஏற்கனவே இருக்கிற எங்களுடைய மாவட்டம் இன்னும் குறைக்கப்பட்டு விடுமே என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு இந்த முயற்சியை பரிசீலனை செய்வதுபற்றி அரசாங்கம் ஒத்திவைத்திருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் திருத்தணி தாலுக்கா நியாயமாக இருக்க வேண்டும். ஆனால் ஏற்கெனவே இருந்த முதல் அமைச்சர் சொந்த காரணத்திற்காக செங்கல்பட்டு மாவட்டத்தில் அதை சேர்த்திருக்கிறார்கள். அது கிழக்கு பாகிஸ்தான் போலவும் மேற்கு பாகிஸ்தான் போலவும் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? எனவே அதை மாற்றி திருத்தணி தாலுக்காவை வட ஆர்க்காடு மாவட்டத்தில் சேர்ப்பதற்கு உத்தேசம் உண்டா ?

1969 மார்ச் 25]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கிழக்கு பாகிஸ்தான் மேற்கு பாகிஸ்தான் என்று சொல்லிதான் கிழக்குப் பாகிஸ்தானையும் மேற்குப் பாகிஸ்தானையும் எப்படி சேர்ப்பது என்று விழித்துக்கொண்டிருக்கிறார்கள். இருக்கிற நிலைமையில் இப்போது இருப்பதே நன்றாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த மாவட்டங்களைப் பிரிக்கிற நேரத்தில் வக்கீல்கள் சங்கம் எதிர்ப்பு தெரிவித்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வக்கீல்கள் தாங்கள் கோர்ட்டுக்குப் போகவேண்டுமென்பதற்காக அப்படித்தான் சொல்வார்கள் பொதுஜனங்களுக்கு வசதியாக இருப்பதைப்பற்றி அவர்கள் அபிப்பிராயத்தை சொல்லமாட்டார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வக்கீல்கள் பற்றி இத்தகைய நோக்கம் கற்பிக்கத் தேவையில்லை. அவர்கள் தெரிவித்ததும் ஒரு அம்சமாக இருக்கலாமே தவிர வக்கீல்களும் பொதுவாக மக்களிடத்தில் பாண்டித்தியம் உள்ளவர்களாகவே இருக்கிறார்கள். வக்கீல்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டிருக்கிற கருத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, காஞ்சீபுரம் இவற்றை தனி மாவட்டங்களாக பிரிப்பதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்போதுள்ள நிலையிலே காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு மாவட்டமாக அமைக்கப்பட்டிருக்கிறது. நான் அடிக்கடி இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன் சரித்திர பூர்வமாகவும் பூகோள ரீதியிலேயும், பொருளாதார தன்மையிலேயும் அப்படி பல்வேறு தன்மைகளைக்கொண்டு மாவட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று. இப்போது அவைகளை மாற்றவேண்டிய அவசியம் இல்லை. மாற்றவும் முடியாது. நிர்வாகம் வசதியாக இருப்பதற்கு குறைந்த அளவிற்கு மாவட்டம் வேண்டும். சிறந்த முறையில் காரியங்களை நிறைவேற்றுவதுதான் அரசினுடைய குறிக்கோள். எனவே, சாத்தியப்பட்ட வகையில் மாவட்டங்களை மாற்றி அமைக்க அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

திரு. இல. பலராமன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மறைந்த முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் வந்தவாசி தாலுக்காவையும், செய்யாறு தாலுக்காவையும் பிரிக்கலாம் என்று சொன்னதாக சொன்னார்கள். இந்த இரண்டு தாலுக்காக்களும் அந்த மாவட்டத்திற்கு உயிர்நாடியாகவும் அதிகமாக விளையக்கூடிய பகுதியாகவும் இருக்கின்றன. எனவே அப்படிப் பிரித்தால் அங்கே வறட்சி நிலைமை ஏற்படும் என்பதை உணர்கிறார்களா ? எனவே இப்போது வைத்திருக்கக்கூடிய முறையையே வைத்திருக்க அரசு உறுதி கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப் பரிசீலிக்கின்ற நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான யோசனையும் எடுத்துக்கொண்டு அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. கே. விநாயகம் : மேற்கூறிய வட ஆர்க்காடு இப்போது பெருமை இழந்திருப்பதற்குக் காரணம் அதிலே இருந்த பலமநேரி, சித்தூர் மாவட்டத்திற்குப் போய்விட்டதனாலேதான். திருத்தணி மக்கள் செங்கல்பட்டு மாவட்டத்திலேயே இருந்துவிடுகிறோம். அது 24 மைலுக்குள் இருக்கிறது. 50 மைலுக்கு அப்பால் உள்ள வட ஆர்க்காடு மாவட்டத்தில் நாங்கள் சேர விரும்பவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இவ்வளவு நாட்களாக தெரியாமல் இருந்தது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலிருந்து தெரிகிறது. திரு வி. கே. கோதண்டராமன் அவர்களுடைய கேள்விக்கு இந்தக் கேள்வியிலிருந்து பதில் பெறுவார் என்று நினைக்கிறேன்.